இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 293 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – வைகாசி 20 – செவ்வாய்க்கிழமை 03 ஜூன் 2025 – கோவை ★★ 28 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 293 : Thiruvalluvar Year - 2056 - Vaikasi 20 - Tuesday 03 June 2025 - Kovai ★★ 28 Pages ₹ 5.00


# மண் - மொழி - மானம் காத்திட ‘ஓரணியில் தமிழ்நாடு’

## கழக புதிய உறுப்பினர் சேர்ப்புத் திட்டம் – பொதுக்குழுவில் கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் சிறப்புத் தீர்மானம்!

**மதுரை, ஜூன் 3-**

**மதுரையில் நேற்று முன்தினம் கழகப் பொதுக்குழுக் கூட்டம் கழகத் தலைவர் - முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இப்பொதுக்குழுவில் 27 வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இப்பொதுக்குழுவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கொண்டுவந்த சிறப்புத் தீர்மானத்தில் “மண் - மொழி - மானம் காத்திட ‘ஓரணியில் தமிழ்நாடு’ கழக புதிய உறுப்பினர் சேர்ப்புத் திட்டத்தை முன்னெடுக்க வேண்டும்” என வலியுறுத்தப்பட்டது. இச்சிறப்புத் தீர்மானம் உறுப்பினர்களின் கரவொலிக்கிடையே நிறைவேற்றப்பட்டன.**

இந்திய தேர்தல் ஆணையத்தால் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் ஆண்டுக்கு ஒருமுறை பொதுக்குழுக் கூட்டத்தையும், 2 முறை செயற்குழுக் கூட்டத்தையும் நடத்த வேண்டும் என்பது விதிமுறை ஆகும். அந்த வகையில், தி.மு.க.வின் பொதுக்குழுக் கூட்டம் மதுரை உத்தங்குடியில் நேற்று முன்தினம் (ஞாயிற்றுக்கிழமை) காலை தொடங்கி நடைபெற்றது.

**வரலாற்றுச் சிறப்புமிக்க 27 தீர்மானங்கள்!**

கழகப் பொதுக்குழுவில் 27 வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.

கழகப் பொதுக்குழு கூடியதும் மதுரை வடக்கு மாவட்டச் செயலாளரும், அமைச்சருமான பி.மூர்த்தி அனைவரையும் வரவேற்று பேசினார். மேலும் இப்பொதுக்குழுவில் இரங்கல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மதுரையில் நேற்று முன்தினம் நடைபெற்ற கழகப் பொதுக்குழுக் கூட்டத்தில் கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களால் கொண்டு வரப்பட்ட சிறப்புத் தீர்மானம் வருமாறு:-

**மண் - மொழி - மானம் காத்திட ‘ஓரணியில் தமிழ்நாடு’ கழக புதிய உறுப்பினர் சேர்ப்புத் திட்டம்!**



**‘எல்லாருக்கும் எல்லாம்’ எனும் திராவிட மாடல் ஆட்சியின் திட்டங்கள் அனைத்தும் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருவதால், ஒவ்வொரு வீட்டிலும் ஒருவராவது ஏதேனும் ஒரு திட்டத்தில் பயனாளியாக உள்ளனர். இத்தகைய நலத்திட்டங்களும், மாநிலத்தின் வளர்ச்சியும், தொடர்ந்திடவும், மாநில உரிமைக்கான போராட்டங்களை உறுதியுடன் முன்னெடுக்கவும், நமது மண், மொழி, மானம் காத்திடவும் தமிழ்நாட்டின் அனைத்து குடும்பங்களும் ஒரு குடையின் கீழ் ஒன்றாய் இணைத்து, வருகின்ற சட்டமன்ற தேர்தலை எதிர்கொள்ள வேண்டியது காலத்தின் கட்டாயமாக உள்ளது. துளியும் சமரசமின்றி நெஞ்சுரத்தோடு தமிழ்நாட்டின் உரிமைகளைக் காத்திடும் பொருட்டு “ஓரணியில் தமிழ்நாடு” என உறுப்பினர் சேர்க்கையை கழகம் முன்னெடுக்க வேண்டும் என இப்பொதுக்குழு தீர்மானிக்கிறது.**

**கழகத்தின் சார்பில் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள பூத் கமிட்டிகள் மூலம் ஒவ்வொரு வாக்குச்சாவடியிலும் குறைந்தபட்சம் 30 சதவீத வாக்காளர்களை கழகத்தின் உறுப்பினராக இணைத்திட இலக்கு நிர்ணயிக்கப்படுகிறது. வீடு வீடாகச் சென்று அரசின் திட்டங்களையும், உரிமைப் போராட்டங்களையும் எடுத்துக் கூறி, தமிழ்நாட்டின் வாக்காளர்களை ‘ஓரணியில் தமிழ்நாடு’ என்ற முன்னெடுப்பில் இணைப்பதற்கான செயல்களை மேற்கொண்டு, அடுத்து வரும் இரண்டு மாதங்களில் மாவட்ட - பகுதி - நகர - ஒன்றிய - பேரூர் - வட்ட கிளை கழகச் செயலாளர்கள் தங்களுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள இலக்கினை நிறைவு செய்திட வேண்டும். அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள் தொடங்கி, பாக முகவர்கள் வரை கழகத்தின் அனைத்து உடன்பிறப்புகளும் இதில் முழுமூச்சாக உழைத்திட வேண்டும்.**

**புதிய உறுப்பினர் சேர்க்கைப் பணியை தொகுதி பார்வையாளர்களும், மாவட்டச் செயலாளர்களும் முழுமையாகக் கண்காணித்து வெற்றிகரமாக்கிட வேண்டும் என இப்பொதுக்குழு தீர்மானிக்கிறது.**

இவ்வாறு கழகத் தலைவர் - முதல்வர் அவர்கள் கொண்டுவந்த சிறப்புத் தீர்மானம் உறுப்பினர்களின் கரவொலிக்கிடையே நிறைவேற்றப்பட்டன.

---

## ஏழாவது முறையாக கழகம் ஆட்சி அமைக்க அடிகோலும் பொதுக்குழு ! தி.மு.க. கூட்டணி வெற்றி பெற உறுதி ஏற்பீர்!

## தி.மு.க. இருக்கும் வரை – டெல்லி படையெடுப்பால் ஒருபோதும்

# தமிழ்நாடு வீழாது! தமிழ்நாடு போராடும்! தமிழ்நாடு வெல்லும்!

## மதுரையில் கழகப் பொதுக்குழுவில் கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் எழுச்சி உரை!

**மதுரை, ஜூன் 3 -**

**மதுரையில் நேற்று முன்தினம் கழகப் பொதுக்குழு நடைபெற்றது. இப்பொதுக்குழுவில் கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றுகையில் ஏழாவது முறையாக கழகம் ஆட்சி அமைக்க அடிகோலும் பொதுக் குழு இது தி.மு.க. கூட்டணி வெற்றி பெற உறுதி ஏற்பீர்! என்றும் தி.மு.க. இருக்கும் வரை - டெல்லி படையெடுப்புக்கு ஒருபோதும் தமிழ்நாடு வீழாது! தமிழ்நாடு போராடும் ! தமிழ்நாடு வெல்லும்! என்றும் உறுதிபட குறிப்பிட்டார்.**

மதுரையில் நேற்று முன்தினம் நடைபெற்ற கழகப் பொதுக்குழுவில் முதல்வர் - கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-

வரலாற்றுச் சிறப்புமிக்க மதுரை மண்ணில் தொன்மையான தமிழரின் பண்பாட்டை எடுத்துக் காட்டும் மதுரை மண்ணில், தமிழ்நாட்டின் எதிர்காலத்துக்கு தேவையான முடிவுகளை எடுக்கவும் தமிழ்நாட்டைச் சூழ்ந்து நிற்கும் பகையை எதிர்கொண்டு முறியடிக்க வியூகங்கள் அமைக்கவும் வெற்றியை நோக்கி உழைக்கவும், இந்தப் பொதுக்குழுவை கூட்டியிருக்கிறோம்!

போர் முழக்கம் கேட்டதுமே, வெற்றியைப் பறிக்கும் வேகத்துடன் களம் புகும் வேங்கைகள் போன்று, இங்கு கூடியிருக்கும் உங்களை பார்க்கும்போது, புது எனர்ஜி வருகிறது!

**மதுரையில் தலைவர் கலைஞர் பேசியது!**

இன்றைக்கு தமிழ்நாட்டு உரிமைகளை நிலைநாட்ட உயர பறப்பது, நம்முடைய கருப்பு சிவப்புக் கொடி! இந்தக் கொடி எத்தனை போராட்டங்களுக்கு பிறகு எத்தனை எத்தனை தியாகங்களுக்குப் பிறகு விண்ணுயர பறக்கிறது என்பதற்கு, தலைவர் கலைஞர் அவர்கள் மதுரை மேலமாசி வீதியில் பேசியதை நினைவூட்ட விரும்புறேன்... “மதுரை மண்டலத்தில் தி.மு.க.வை வளர்க்க நானும் மதுரை முத்துவும் பட்டபாடு கொஞ்ச நஞ்சமல்ல! 1949ஆம் ஆண்டு உருவான இந்த திராவிட முன்னேற்றக் கழகத்தை வளர்க்க வேண்டும் என்பதற்காக, மதுரையில் 100 இடங்களில் கொடியேற்றுவது என்று நானும் மதுரை முத்துவும் திட்டமிட்டுக் கொடி ஏற்றினோம். அப்படி அந்தக் கொடியை ஏற்றும்போது கொடியின் கயிற்றை எடுத்து என்னிடம் முத்து கொடுப்பார். கொடியை ஏற்றும்போதே அந்தக் கயிற்றின் மீது அரிவாள், கத்தி வந்து விழும். அதில் அந்தக் கயிறு அறுந்து விழும். அப்போது, என் கையிலும், முத்துவின் கையிலும் ரத்தம் கொட்டும். அந்த ரத்தத்தைத் துண்டில் ஏந்தியபடி தொண்டர்கள் எங்களை மருத்துவமனைக்கு அழைத்து செல்வார்கள். அத்துடன் கொடியேற்றும் நிகழ்ச்சி முடிந்து விடாது. அடுத்த கொடியை ஏற்றுவோம். இப்படி அடுத்தடுத்து கொடிகளை ஏற்றியதால் இன்று விண்முட்ட கழகக் கொடிகளைக் காண முடிகிறது” என்று தலைவர் கலைஞர் பேசினார்.

**முன்னாள் மேயர் முத்துவுக்கு சிலை!**

அதேபோன்றுதான், நானும் மதுரையில் கொடி ஏற்றி இருக்கிறேன். ஒருங்கிணைந்த மதுரை மாவட்டச் செயலாளராக இருந்த அண்ணன் பொன். முத்துராமலிங்கம் என்னை மதுரைக்கு அழைத்து வந்து, நான்கு நாட்கள் இரவு பகலாக கொடியேற்று விழாவில் கலந்துகொள்ளவைத்திருக்கிறார்! அதையெல்லாம் நினைத்து பார்க்கிறேன். அப்படி ரத்தம் சிந்தி கழகம் வளர்க்கப்பட்ட களம் தான், இந்த மதுரை மண். அப்படி உழைத்த முன்னாள் மேயர் முத்து அவர்களுக்கு, நேற்று சிலை திறந்திருக்கிறோம்!

இப்படி கழகத்துக்காக பலர் உழைத்த தியாக பூமியான மதுரை மண்ணில், கழகப் பொதுக்குழு நடப்பதை பெருமையாக கருதுகிறேன். கழகம் தொடங்கியதில் இருந்து, மதுரையில் ஆறு பொதுக்குழு நடைபெற்றிருக்கிறது. இது ஏழாவது பொதுக்குழு! ஏழாவது முறை கழகம் ஆட்சியமைக்க அடிகோலும் பொதுக்குழுதான் இது!

**தி.மு.க.வுக்கு கிடைத்த மருது சகோதரர்கள்!**

கழக வரலாற்றில், மதுரையில் நடந்த சில முக்கிய தருணங்களை சொல்கிறேன். இந்தி எதிர்ப்பு போர்க்களத்துக்கு அடித்தளம் அமைத்தது 1963ஆம் ஆண்டு சட்ட எரிப்பு போராட்டம்! மதுரை முத்து உள்ளிட்ட 5 பேர் ஓராண்டு காலம் சிறைத் தண்டனை பெற்றார்கள். அந்தப் போராட்டத்துக்கு பார்வையாளராக வந்த அன்றைய பொருளாளர் நம்மை எல்லாம் ஆளாக்கிய தலைவர் கலைஞரையும் கைது செய்து அடைத்தார்கள். மதுரை மாவட்டத்து மொழிப்போர் தளபதிகள் விடுதலையான அன்றைக்கு நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் உரையாற்றிய தலைவர் கலைஞர் அவர்கள், “மதுரை முத்துவும் எஸ்.எஸ். தென்னரசும் தி.மு.க.வுக்கு கிடைத்த மருது சகோதரர்கள்” என்று பாராட்டினார்.



அதேபோன்று, 1982ஆம் ஆண்டு திருச்செந்தூர் கோயில் விவகாரத்துக்கு, நீதிகேட்டு நெடும் பயணத்தை மதுரையில் இருந்துதான் தலைவர் கலைஞர் அவர்கள் தொடங்கினார். பல நாட்கள் காலில் கொப்பளம் வெடிக்க தலைவர் கலைஞர் நடைபயணம் மேற்கொண்டார்.

கழகத்தின் தொண்டனாக செயல்பட்டு வந்த, என் வாழ்க்கையில் மாபெரும் திருப்பத்தை ஏற்படுத்திய திராவிட முன்னேற்றக் கழக இளைஞரணியை வழிநடத்தும் வாய்ப்பை பெற்றதும் இதே மதுரையில் இருக்கும் ஜான்சி ராணி பூங்காவில்தான்! அந்த மாநாட்டில் பேசிய தலைவர் கலைஞர் “எங்கள் கால்கள் நடையை நிறுத்தாது, நாங்கள் நடந்து கொண்டேதான் இருப்போம்”என்று சொன்னார். தலைவர் கலைஞர் சொன்னதுபோன்று, நாம் நடந்து கொண்டேதான் இருக்கிறோம். நம்முடைய லட்சியப் பயணம் எப்போதும் நிற்காது!

**அமைச்சர் பி.மூர்த்திக்கு துணைநின்ற அனைவருக்கும் பாராட்டு!**

இத்தகைய வரலாற்றுச் சிறப்புமிக்க மதுரை மண்ணில், இந்த மாபெரும் பொதுக்குழுவை எழுச்சியுடன் ஏற்பாடு செய்திருக்கும் மாண்புமிகு அமைச்சர் மூர்த்தி அவர்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த பாராட்டுகள்! வாழ்த்துகள்! மாமதுரை போற்றுதும், மாமதுரை போற்றுதும் என்று சொல்வதைப் போன்று, மதுரை மூர்த்தி போற்றுதும், மதுரை மூர்த்தி போற்றுதும்என்று பாராட்டுகிறேன். “மூர்த்தி சிறிதானாலும், கீர்த்தி பெரிது”என்று சொல்வார்கள். இங்கு, மூர்த்தியும் பெரிது, கீர்த்தியும் பெரிதுஎன்று சொல்லத்தக்க வகையில் மிகமிகமிக பிரமாண்டமானதாக நடத்திக் காட்டிவிட்டார் அருமைச் சகோதரர் மூர்த்தி அவர்கள். அவருக்கு துணைநின்ற அமைச்சர் பி.டி.ஆர். பழனிவேல் தியாகராஜன், மதுரை மாவட்டக் கழகச் செயலாளர்கள் - தளபதி மற்றும் மணிமாறன் ஆகியோருக்கும்,மதுரை மாவட்டக் கழக நிர்வாகிகள் அனைவருக்கும் பாராட்டுகள்! வாழ்த்துகள்!

சித்திரைத் திருவிழா நடக்கும் நகரில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் முத்திரைத் திருவிழாவாக நம்முடைய பொதுக்குழுவை நடத்திக்கொண்டு இருக்கிறோம். கழகத்தின் இதயமான பொதுக்குழுவை எந்த அரங்கத்துக்கு உள்ளேயும் நடத்த முடியாத அளவுக்கு மைதானத்தில்தான் நடத்த முடியும் என்கிற அளவுக்கு பரந்து விரிந்திருக்கிறது.

100 அடி உயரக் கொடிக் கம்பத்தில் கழகத்தின் கொடி பறக்கிறது. நூற்றாண்டு விழாவை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறோம் என்று இந்த 100 அடி கொடி உணர்த்துகிறது!

மதுரையைச் சுற்றி 60 கிலோமீட்டர் சுற்றளவுக்கு கருப்பு சிவப்பு கொடி பறக்கிறது! அந்தக் காலத்தில் எந்த ஊருக்குச் சென்றாலும் நம்முடைய கொடி பறக்கிறதா என்று என் கண்கள் தேடும். தமிழ்நாட்டில் அத்தனை ஊரிலும், அத்தனை நகரத்திலும் அதிகக் கொடி ஏற்றிய கை, இந்த ஸ்டாலினின் கை.

**தமிழ்நாட்டை - தமிழினத்தை இனியும் காப்போம்!**

பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் அறிவுலக ஆசான் பேரறிஞர் அண்ணா தமிழினத் தலைவர் கலைஞர் திராவிட முன்னேற்றக் கழகம் கருப்பு சிவப்புக் கொடி உதயசூரியன் சின்னம் அண்ணா அறிவாலயம், இவைதான் நம் உயிர்! இந்த உயிர்களைக் கொண்டு, உயிரினும் மேலான தமிழ்நாட்டை தமிழினத்தை இதுவரை காத்தது போன்று, இனியும் காப்போம் என்று உறுதி எடுத்துக்கொள்ளும் பொதுக்குழு தான் இந்தப் பொதுக்குழு!

திராவிட முன்னேற்றக் கழகம் வழக்கமான அரசியல் கட்சி அல்ல! வரலாற்றில் எத்தனையோ அரசியல் கட்சிகள் வரும் போகும்! ஆனால், கொள்கைக்காக தோன்றி, லட்சியத்துக்காக தியாகங்கள் செய்து, மக்களின் ஆதரவைப் பெற்ற அரசியல் இயக்கம், இந்தியாவிலேயே முதன்முதலாக ஒரு மாநிலக் கட்சி ஆட்சியைப் பிடித்த வரலாற்றைப் படைத்த இயக்கம், நம்முடைய இயக்கம்! எத்தனை சோதனை நெருப்பாறுகள் வந்தாலும், அதில் எதிர்நீச்சல் போட்டு, உயர்ந்து நிற்கும்!


தொடர்ச்சி 5 -ஆம் பக்கம்


### அருமைச் சகோதரர் - அமைச்சர் மூர்த்திக்கு பாராட்டுகள்!



வரலாற்றுச் சிறப்புமிக்க மதுரை மண்ணில், இந்த மாபெரும் பொதுக்குழுவை எழுச்சியுடன் ஏற்பாடு செய்திருக்கும் மாண்புமிகு அமைச்சர் மூர்த்தி அவர்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த பாராட்டுகள்! வாழ்த்துகள்! மாமதுரை போற்றுதும், மாமதுரை போற்றுதும் என்று சொல்வதைப் போன்று, மதுரை மூர்த்தி போற்றுதும், மதுரை மூர்த்தி போற்றுதும் என்று பாராட்டுகிறேன். “மூர்த்தி சிறிதானாலும், கீர்த்தி பெரிது”என்று சொல்வார்கள். இங்கு, மூர்த்தியும் பெரிது, கீர்த்தியும் பெரிது என்று சொல்லத்தக்க வகையில் மிகமிகமிக பிரமாண்டமானதாக நடத்திக் காட்டிவிட்டார் அருமைச் சகோதரர் மூர்த்தி அவர்கள்.


கழகப் பொதுக்குழு தீர்மானங்கள் ! பக்கம் - 3